# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | C.C.72/2022 | Date | : 07.07.2026 |
| Deposition of Witness for | அ.சா.9 | Taluk | : |
| Name | செந்தாமரைசெல்வி | Calling | : |
| Father/Husband Name | | Religion | : இந்து |
| Village | | Age | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 07.07.2026.**

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது, சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02-01-2021-ம் தேதி, 14.00 மணிக்கு, சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக திருமுருகன், என்பவர் பணிபுரிந்தபோது, முன்னதாக சங்ககிரி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மணியம்மாள், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.07/2021, சட்டப்பிரிவுகள் 294(b), 324 இதச மற்றும் 4 of TNPHW ACT-ன் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையை புகார் வாக்குமூலத்துடன் சேர்த்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2) பின்னர், புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட நான் அன்றைய தினமே, 16.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடச்சாட்சிகள் சாந்தி மற்றும் கௌசிகா ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்து அவர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன் (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவ இடச்சாட்சிகள் பிரியதர்சன், தங்கராஜ், பழனிசாமி, மாதேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து இவ்வழக்கின் எதிரிகள் கார்த்திக்குமார், கவின் (எ) கவின்குமார், பிரவீன்குமார், ராஜி (எ) ராஜு ஆகியோர்களை தேடிவந்த நிலையில் அவர்கள் கடந்த 25-01-2021ம் தேதி, சேலம் மாவட்ட மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

4) பின்னர், சங்ககிரி அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட மணியம்மாள், என்பவருக்கு சிகிச்சை அளித்த சங்ககிரி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முருகவேல், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை பெற்றேன்.

5) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சி-2 பிரியதர்ஷன் கோவிலுக்கு செல்லும்போது 1ம் எதிரி தடுத்துள்ளார் என்றும், எதிரிகள் சாட்சிகளை கையால் அடித்தும், காலால் உதைத்தும் தடுக்க வந்த சாட்சி-1ஐ எதிரிகள் ஆபாச வார்த்தையால் திட்டி, கையால் அடித்தும், காலால் உதைத்தும், சேலை ஜாக்கெட்டை

கிழித்து மானபங்கம் படுத்தியும் அடிப்பதை தடுக்க வந்த சாட்சி தங்கராஜ்-ஐ எதிரிகள் கையால் அடித்தும், காலால் உதைத்தும், சாட்சி பழனிசாமியை 4 ம் எதிரி ராஜீ ஆபாச வார்த்தையால் திட்டியுள்ளார் என்பது தெரியவந்ததாலும் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 324 இதச மற்றும் 4 of TNPHW ACT-லிருந்து சட்டப்பிரிவுகள் 341, 294(b), 352, 324 இதச மற்றும் 4 of TNPHW ACT பிரிவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்-1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

6) பின்னர், புகார் வாக்குமூலம் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமுருகன், என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், இத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 352, 324 இதச மற்றும் 4 of TNPHW ACT ன் கீழ் கனம் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை-**

1) புகார் வாக்குமூலம் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டதற்கான காரணத்தை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் எனது விசாரணையில் தெரிவிக்கவில்லை. 36 மணிநேரம் காலதாமதமாக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக எங்களுக்கு மருத்துவமனையில் இருந்து கொடுத்த அடிதடி காயத்தகவலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விபத்து

பதிவேட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளோம், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) அ.சா.ஆ.3 ல் காவல் நிலையத்தில் தகவல் தெரிவிக்கப்பட்ட விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் "Yes" என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்ககிரி அரசு மருத்துவமனைக்கும், சங்ககிரி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் ஒரு கி.மீ தூரம் இருக்கும். 31-12-2020 ம் தேதியன்று சம்பவம் நடந்து 02-01-2021 ம் தேதியன்று தான் புகார் வாக்குமூலம் பெறப்பட்டதற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. புலன் கொள்ள தக்க குற்றமாக இருந்தால் பொது நாட்குறிப்பில் பதிவு செய்து பின்பு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

3) முதல் தகவல் அறிக்கையில் பிரிவு 3c நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரிதான். நாகிசெட்டிபட்டியில் இருந்து சங்ககிரி அரசு மருத்துவமனை செல்ல வேண்டும் என்றால் சங்ககிரி காவல் நிலையம் வழியாக தான் செல்ல வேண்டும் என்றால் சரியல்ல, வேறு வழியாகவும் செல்லலாம். சாட்சிகளின் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாமதமாக தான் அனுப்பியுள்ளோம் என்றால் குற்ற இறுதி அறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்துள்ளோம். பொதுவாக, ஒரு குற்ற வழக்கில் முக்கிய ஆவணங்களை 24 மணிநேரத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான்.

4) அ.சா.2 பிரியதர்ஷன் மாரியம்மன் கோவிலுக்கு சென்றபோது தடுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி மாரியம்மன் கோவிலில் இருந்த பூசாரியை விசாரித்துள்ளேனா என்றால் சம்பவம் நடந்த சமயத்தில் மேற்படி மாரியம்மன் கோவிலில் பூசாரி இல்லை. மேற்படி மாரியம்மன் கோவிலில் பூசாரி இல்லை

என்பதை எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் வாய்மொழியாக கேட்டு தெரிந்துகொண்டேன். அ.சா.3 தங்கராஜ், மேற்படி மாரியம்மன் கோவிலின் பொறுப்பாளர் என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

5) அ.சா.3 தங்கராஜ், மேற்படி மாரியம்மன் கோவிலின் பொறுப்பாளர் என்ற முறையில் மக்களிடம் வசூல் செய்த தொகை குறித்த கணக்கு வழக்குகளை எதிரிகள் கேட்டதால் தான் எதிரிகளுக்கும், அ.சா.3 ன் குடும்பத்தினருக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்ற விவரத்தை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 31-12-2020 ம் தேதியன்று ஆங்கில புத்தாண்டை கொண்டாடும் விதமாக மேற்படி மாரியம்மன் கோவிலில் செட் அமைத்து இளைஞர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்பதை விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை, சம்பவம் நடந்தது சங்ககிரி ஆர்.எஸ்., பகுதி என்பதால் நான் அது குறித்து விசாரிக்கவில்லை.

6) அ.சா.2 மாரியம்மன் கோவிலுக்கு சென்றதாக சொல்லப்படும் சமயத்தில் கோவில் பூட்டப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறாததால் தான் மாரியம்மன் கோவில் பூசாரியை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துளசிமணி, மாதவி, புனிதா, கண்ணாயி, முனுசாமி ஆகியோர்களை விசாரித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் சம்பவ நடந்ததற்கான ரத்தகரை போன்ற அறிகுறிகள் இல்லை என்றால் சரிதான். நாகிசெட்டிப்பட்டி பகுதியில் எத்தனை குடும்பங்கள் உள்ளன என்றால் சுமார் 50 குடும்பங்கள் உள்ளன.

7) அ.சா.1 எனது விசாரணையில் எனது கணவரும், பிரியதர்ஷனும் சங்ககிரி ஆர்.எஸ்., உள்ள கடைக்கு சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், சங்ககிரி ஆர்.எஸ்., செல்வதாக சொல்லியுள்ளனர். அ.சா.1 எனது விசாரணையில் கார்த்திக்குமார், பிரியதர்ஷனை பார்த்து உன்னை இப்போது அடிக்காமல் விடமாட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், எப்போதிருந்தாலும் உன்னை அடிக்காமல் விடமாட்டேன் என்று சொல்லியதாக குறிப்பிட்டுள்ளேன். அ.சா.1 எனது விசாரணையில் பிளேடால் கீறியதால் ரத்தம் வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் பிளேடால் கீறியதால் காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்.

8) அ.சா.2 எனது விசாரணையில் சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் அனைவரும் அங்கு வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் கார்த்திக்குமார், எனது மகன் கன்னத்தில் இரண்டு அறை விட்டதில் எனது மகன் கீழே விழுந்துவிட்டார் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.3 எனது விசாரணையில் கார்த்திக்குமார், ஜாக்கெட்டை கிழித்தார் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, கார்த்திக்குமார், கவின், பிரவீன்குமார் ஆகிய மூவரும் கிழித்தாக சொல்லியுள்ளார். கிழித்ததாக சொல்லப்படும் ஜாக்கெட்டை கைப்பற்றினோமா என்றால் இல்லை.

9) 1ம் எதிரி காதல் திருமணம் செய்து ஊரில் வந்து விழா நடத்தியபோது அ.சா.3 ன் குடும்பத்தினரை அழைக்காதால் அவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுபோல் அ.சா.2 கோவிலுக்கு செல்லவும் இல்லை, அவரை எதிரிகள்

தடுக்கவும் இல்லை, அதன்பின்பு அ.சா.3 ன் வீட்டிற்கு சென்று தகராறு செய்யவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அவர்களது சமூகத்தில் முற்போக்கான எண்ணம் கொண்டவர்களாக இருப்பதாலும், அ.சா.3 நிர்வகிக்கும் மாரியம்மன் கோவிலின் கணக்கு வழக்குகளை கேட்டதால் விரோதம் கொண்டு இந்த வழக்கு புகாரினை பொய்யாக எதிரிகள் மீது கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

10) இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தான் வழக்கு விசாரணை செய்ய தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், அதற்கான காரணத்தை தெளிவாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. மாரியம்மன் கோவில் பூசாரி செங்கோடன் என்பவரை விசாரித்திருந்தால் உண்மை நிலவரம் தெரிந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னவாறு, சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Senthamaraiselvi